களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Kalanjiyam - International Journal of Tamil Studies (KIRJTS)
*An Internationally Peer-Reviewed, Open Access Quarterly Journal*
*eISSN: 2456-5148*
*Vol. 4 Issue: 04 November 2025*
https://doi.org/10.63300/kirjts

# THE PROFESSIONS OF ANCIENT PEOPLE AS REVEALED THROUGH SANGAM LITERATURE

**Dr.P.KARPAGARAMAN**
*Assistant Professor, Department of Tamil Sona College of Arts and Science, Salem – 05*
*Email: dkkaveeswar@gmail.com ORCID: https://orcid.org/0000-0003-1625-7209*

*Article Received: 25-10-2025*
*Peer Reviewed: 27-10-2025*
*Accepted on: 30-10-2025*
*Published on: 01-11-2025*

**Abstract:**

The criterion for determining the civilizational development of a country is its professional development. In this regard, the ancient Tamils were efficient in all activities, from choosing a profession to successfully taking it to a stage of development. Not only that, they were also excellent in improving their economic status through these professions. This article aims to examine and explain how ancient people organized their professions. This organization was not merely a list of jobs, but a complex, sustainable socioeconomic architecture. Their efficiency stemmed from a clear division of labor, ensuring deep specialization that fostered powerful internal trade and robust maritime links. We will delve into the rich tapestry of Sangam literature and archaeological evidence to map the intricate occupational divisions, revealing how professional roles—from farming and metallurgy to seafaring and fine arts—were not only respected but intricately woven into the very fabric of their societal hierarchy, guaranteeing both economic stability and cultural continuity for millennia.

**Keywords**: *Agricultural industries, Commercial industries, Fishing-Pearl mining.*

**References:**

1. Arimathi Ilambarathi. Sangam Ilakkiyathil Melāṇmai. Ilakshmi Nilayam, 2006.
2. Ā.Ku. Vaṇika Poruliyal. Raja Publications, 2010.
3. Ā.Ku. Samūgaviyal Koḷkaikaḷ. Anna University, Paari Nilayam, 2000.
4. Sivalinganaar, A. Tholkāppiyam. Ulaththamizharāyarchi Niṟuvanam, 2021.
5. Parimelazhagar. Thirukkural. Thirumagal Nilayam, July 2014.
6. Balasubramanian, Ku. Ve. Kurunthokai (Mūlamum Uraiyum). New Century Book House (P) Ltd, April 2004.
7. Balasubramanian, Ku. Ve. Akanāṉūṟu (Mūlamum Uraiyum). New Century Book House (P) Ltd, April 2004.
8. Balasubramanian, Ku. Ve. Puṟanāṉūṟu (Mūlamum Uraiyum). New Century Book House (P) Ltd, April 2004.
9. Balasubramanian, Ku. Ve. Kaliththokai (Mūlamum Uraiyum). New Century Book House (P) Ltd, April 2004.

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# சங்க இலக்கியங்கள் வழி அறியலாகும் பண்டைய கால மக்களின் தொழில்கள்

**முனைவர் ப.கற்பகராமன்**

உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை

சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் - 05.

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு நாட்டின் நாகரிக வளர்ச்சியினைத் தீர்மானிக்கும் அளவுகோலாய் அமைவது அந்நாட்டின் தொழில்முறை வளர்ச்சியே ஆகும். அந்த வகையில், ஒரு தொழிலைத் தேர்ந்தெடுப்பது முதல் அதனை வளர்ச்சி நிலைக்கு வெற்றிகரமாகக் கொண்டு செல்வது வரை எல்லாச் செயல்களிலும் பழந்தமிழர்கள் திறமையுடன் செயல்பட்டனர். அதுமட்டுமின்றி, இத்தொழில்கள் மூலம் தங்களுடைய பொருளாதாரத் தரத்தை மேம்படுத்திக் கொள்வதிலும் சிறந்து விளங்கினர். பண்டைய கால மக்கள் எவ்வாறு தங்கள் தொழில்களை அமைத்துக்கொண்டனர் என்பதை ஆராயந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**குறிப்புச் சொற்கள்:** நிலஞ்சார்த் தொழில்கள்- வாணிகத் தொழில்கள்- மீன் வேட்டம் –முத்துக்குளித்தல்.

**ஆய்வு நோக்கம்**

மக்கள் வாழ்கின்ற வாழ்க்கைமுறை அவரவர்களுடைய தொழில்முறை சார்ந்தே அமைகின்றது. காலங்கள் எதுவாயினும் தாங்கள் வாழும் காலத்திற்கு ஏற்பவும், தங்களுடைய அறிவின் வளர்ச்சிக்கு ஏற்பவும் அற வழியில் தொழில் செய்து அதன்மூலமே தங்களுடைய வாழ்வியலை மேம்படுத்தியுள்ளனர் என்பதைப் பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய இலக்கியங்கள் மூலம் அறிய முடிகின்றது. அதன் அடிப்படையில் பண்டைய கால மக்கள் எவ்வகையான தொழில்கள் மேற்கொண்டனர் என்பதை விளக்குவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு அனுகுமுறை**

பண்டைய கால மக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள தொழில்களை, அவ்விலக்கியங்கள் வழி எடுத்துக் காட்டி, அதனை விளக்கியும் கூறுவதால் இந்த ஆய்வானது எடுத்துக் கூறும் முறை ஆய்வு மற்றும் விளக்கமுறை ஆய்வு என்ற இரண்டு தன்மைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**முன்னுரை :**

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அந்நாட்டை ஆளும் அரசனை மட்டுமல்லாமல் அந்நாட்டில் வாழுகின்ற குடி மக்களையும் சார்ந்ததாகும். அந்த வகையில் பழந்தமிழர்களின் வாழ்வில் ஒரு பகுதி வாணிகத்தைச் சார்ந்தே இருந்தது. அந்த வாணிகம் இக்கால விஞ்ஞான வளர்ச்சி மிக்க வாணிகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட வாணிகமுறையாகத் திகழ்ந்தது. மேலும், காலத்திற்குத்

தகுந்தபடி சூழ்நிலைக்கு ஏற்றவாறு தரைவழி வாணிகத்தையும், கடல்வழி வாணிகத்தையும் அக்கால வணிகர் மேற்கொண்டனர். இதனால் பொருளாதார நிலை உயர்ந்து, நாடு செழித்து, மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தனர். இவ்வாறான வாழ்விற்கு வாணிகம் ஒரு முக்கியக் காரணமாக விளங்கிற்று.

வாணிகமானது திட்ட வரையறையுடன் கூடிய, நிருவாக திறன்களை உள்ளடக்கிய செயல்முறையாக அக்காலத்தில் இருந்தது. இதனை உறுதிச் செய்யும் விதமாகவும் அவற்றை வெளிக்கொணரும் நோக்குடனும் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது. மேலும், எவ்வித வாணிகமாக இருந்தாலும் அவற்றிற்கு அடிப்படையாக விளங்குவது அந்நாட்டின் தொழில்வளமே ஆகும். மனிதன் தன்னுடைய அடிப்படைத் தேவைகள் விரிவடையும் ஒவ்வொரு காலக்கட்டத்திலேயும் அத்தேவைகளை நிறைவு செய்ய புதிய புதிய தொழில்களையும், தொழில் முறைகளையும் கையாண்டு தன்தேவையை நிறைவு செய்து வந்திருக்கிறான். அந்தவகையில், ஒரு நாட்டின் வளமைக்கும் வளர்ச்சிக்கும் அந்நாடு தொழிலிலும், தொழில்நுட்பத்திலும் வளர்ச்சி அடைவது தேவையாகிறது. எனவே, ஒரு தொழிலைத் தேர்ந்தெடுப்பது முதல் அதை வெற்றிகரமாக நடத்துவதுவரை எல்லா செயல்களிலும் பொருளாதாரத்தை எப்படிக் கையாளலாம் என்று வாணிகப் பொருளாதாரம் நமக்குத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. தொழில் நுட்பக் கூறுகளின் அவசியத்தை சங்க இலக்கியத்தில் மேலாண்மை என்ற நூலும்,

**“தொழிலில் தொழில்நுட்பக் கூறுகளைப் பயன்படுத்தாத எந்த ஒரு நிறுவனமோ துறையோ அல்லது நாடோ என்றாலும் வளர்ச்சி காண்பதும் தன்னிறைவு பெறுவதும் அரிதாகிறது”.**

**(சங்க இலக்கியத்தில் மேலாண்மை,ப.1)**

என்று குறிப்பிடுகின்றது.

**தொழில்கள் – வரையறை**

பண்டைத் தமிழகத்தில் வழக்கிலிருந்த தொழில்கள் குறித்து அறியும் முன்னர் தொழில் என்பதற்கான வரையறைகளைக் காண வேண்டியுள்ளது. ‘உழைப்பு’, என்பது பெயர்ச்சொல்லாக ஒரு செயல் அல்லது தொழிலைக் குறிக்கும்.

பொருளியல் பேரறிஞராகிய மார்சல் உழைப்பிற்குப் பின்வரும் இலக்கணம் கூறுகின்றார்.

**“உழைப்பு என்பது மூளையையோ உடலையோ முழுவதுமாகவோ, பகுதியாகவோ வருத்தி ஏதோ ஒன்றைப் படைப்பதற்காகச் செய்கின்ற செயலைக் குறிக்கும்.”**

**(வணிகப்பொருளியல்,ப.5)**

இவ்விலக்கணத்தின்படி ‘உழைப்பு’ எல்லா வகையான தொழில் திறமைகளையும் உள்ளடக்கும். சமூகவியல் என்ற நூல் உழைப்பு குறித்து,

**தொழிலே பொருளாதார வாழ்க்கையின் அடிப்படை. தொழில் செய்யாவிடில் ஊதியமில்லை. ஊதியமின்றேல் வாழ்வில்லை. பொருள் உற்பத்திக்குத் தொழில் தேவைப்படுகிறது. பொருள் உற்பத்தியினால் பொருட்களைச் சந்தைப்படுத்திச் சம்பாதிக்கலாம். சம்பாதித்தால் தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்க முடியும்.**

**(சமூகவியல்,ப.198)**

KALANJIYAM

மேலும், தொழிலைச் செய்வதற்கு உடலுழைப்பும், மன உழைப்பும் இன்றியமையாதவை. ஏனெனில்,

**“மனிதத் தேவைகளுக்கான பொருட்களையும், சேவைகளையும் கொடுப்பதற்காகத்தான். பொதுவாக ஊதியம் பெற்றுக்கொண்டு செய்வதுதான் ‘தொழில்’ என்று வரையறுக்கலாம்”.**

**(சமூகவியல்,ப.198)**

எனறெல்லாம் குறிப்பிடுகின்றது.

இவ்வாறாக உழைப்பு என்பதனுள் அடங்கும் தொழில் திறமைகள் அனைத்தையும் தற்காலத்தொழில் வல்லுநர்கள் பல்வேறு விதமாக வகைப்படுத்திக் கூறுகின்றனர். எனினும் பண்டைத் தமிழர் செய்த தொழில்கள் அவர்கள் வாழ்ந்த சமூதாய நிலைக்கு ஏற்றவாறு பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

1. வாழ்வியல் தொழில்கள்
2. வாணிகத் தொழில்கள்

**வாழ்வியல் தொழில்கள்:**

மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவுச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் தொழில்கள் வாழ்வியல் தொழில்கள் எனப்படுகின்றது.

இவற்றில்,

1) உழவுத் தொழில்
2) நெசவுத் தொழில்
3) நிலஞ்சார் தொழில் (கால்நடை வளர்ப்பு)
4) வாணிகத் தொழில்கள்

போன்றவை குறிப்பிடதக்கவை.

இதைத் தவிர மற்றும் பல தொழில்கள் இருப்பினும் பொருளாதாரத் தரத்தை மேம்படுத்துவதிலும், பொருட்களைச் சந்தைப்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிப்பவையாக மேற்குறிப்பிட்ட வாழ்வியல் தொழில்கள் அமைகின்றன. இவற்றைப் பழந்தமிழ் இலக்கியத்துடன் பொருத்திக் காண மேலும் தெளிவு பெறும்.

**உழவுத் தொழில் (உணவு உற்பத்தி)**

மனித வாழ்விற்கு அடிப்படையாக அமைவது உணவு. ஒருவர் சிறந்த பண்பினைப் பெற, இருக்க வேண்டியது வறுமையின்மை. உழவுத் தொழில் பசியைப் போக்க உதவுவது மட்டுமல்லாமல், நாட்டின் செல்வவளத்தையும் பெருக்க உதவுகின்றது. ஆதலின் உணவுப்பொருளின் இன்றியமையாமையை உணர்ந்து பழந்தமிழர்கள் அவற்றைப் பெருக்கினர். முற்காலத்தில் உழவுத்தொழில் தலைமைத் தொழிலாகவும், உயிர்த் தொழிலாகவும் போற்றப்பட்டது. இக்கருத்தினைத் தொல்காப்பியம்,

**வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது**
**இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி**

**(தொல்.1581)**

எனக் குறிப்பிடுகின்றது.

மேலும், உழவுத்தொழில் செய்யாமல் வேறுபல தொழில்களைச் செய்பவர்களையும் இத்தொழில் தாங்குவதால் உழவுத்தொழில் செய்பவர்கள், இவ்வுலகத்தில் வாழ்பவர்களுக்கு அச்சாணிப் போன்றவர்கள் என்பதனை விளக்கும் வண்ணமாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான திருக்குறளின் வாயிலாக, பின்வருமாறு எடுத்துரைக்கப்படுகிறது.

**உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து**

**(குறள்.1032)**

மேலும், உழவுத்தொழிலை மேற்கொள்வார் **உழவர்** எனப்பட்டனர். **'உழைத்தல்'** என்பது இடைவிடாது முயலும் மெய் முயற்சியைக் குறிக்கும் சொல்லாகும். இம்முயற்சி பயிர்த் தொழிலுக்கு வேண்டப்படுதலின் இத்தொழிலை **'உழவு'** என்ற சொல்லால் பண்டைத் தமிழர் வழங்கினர்.

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்**

**(குறள்.1033)**

உழவுத்தொழில் செய்து வாழ்பவர்களே பிறரை வணங்காமல் வாழ்பவர்கள். மற்றவர்கள் பிறரை வணங்கி வாழ்பவர்கள் என்பதனை உணர்த்தும் விதமாக மேற்கண்ட திருக்குறள் சுட்டிச்செல்கிறது. இத்தகைய உழவுத் தொழிலைக் குறுந்தொகை,

**மரம் கொல் கானவன் புனம் துளர்ந்து வித்திய**
**பிறங்கு குரல் இறடி காக்கும் ……………….**

**(குறுந்.214:1-2)**

என்ற பாடல் வரிகளில் விளக்குகிறது.

இப்பாடலின் வாயிலாக, கானவர் மரங்களை வெட்டிக், களைகளை நீக்கி, அவற்றை விளைநிலமாக மாற்றுவர். அந்நிலத்தில் தினையினை விதைத்து, அதன் கதிர்களுக்குக் குறமகளிர் காவலும் புரிவர். இவ்வாறு பண்டைத் தமிழர்கள் மதிநுட்பத்துடன் கூடிய உழவுத்தொழில் புரிந்தது மட்டுமல்லாமல், திட்டமிட்டுச் செயல்படுபவராகவும் இருந்திருந்தனர் என்பதனை அறியமுடிகிறது.

மேலும், பருவ மழையை எதிர்நோக்கி விளைவிக்கப்பட்ட தினையைவிட நீர்ப்பாய்ச்சி விளையும் தினை முன்னர் விளையும் என்ற கருத்தினை, பின்வரும் அகநானூற்றுப் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

**கொய்யா முன்னும் குரல் வார்பு தினையே**
**அருவி ஆன்ற பைங் கால் தோறும்**
**இருவி தோன்றின பலவே**

**(அகம்.28:3-5)**

மேலும்,

**முதைப் புனம் கொன்ற ஆர்கலி உழவர்**
**விதைக் குறு வட்டி போதொடு பொதுளப்**
**பொழுதோ தான்வந்தன்றே…………….. (குறுந்.155:1-3)**

என்ற குறுந்தொகை பாடல்வரிகளின் மூலம், உழவர்கள் தரிசாக இருக்கும் நிலங்களை உழுது, விதைப்பதற்கு விதைகளை மகிழ்ச்சியுடன் அதிகாலையில் எடுத்துச் சென்று விதைத்து, உழவுத் தொழில் புரிந்தனர் என்பதனை அறியமுடிகிறது. மேலும்,

**பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால்**
**கொழுங்கொடி அவரை பூக்கும்**

**(குறுந்.82:4-5)**

என்ற பாடலடிகளின் மூலம் தினைப் புனத்தில் விதைத்த அவரை மறுகாலில் படர்ந்து, பூத்துக் காய்களை உண்டாக்கும். மேலும், ஒருமுறை விதைத்து தினையின் கதிர்களைப் பெற்று மகிழ்வதோடு, அவற்றின் மறுமுறையும் விளையும் அவரை காய்களையும் பெற்று இன்பம் அடைபவர்களாக உழவர்களும், அவர்தம் உழைப்பின் விளைச்சல்கள் மிகுதியாக இருந்ததை இப்பாடல் பதிவுச்செய்கிறது.

இதன்படி, பழந்தமிழர்கள் எவ்வாறு தங்களுடைய விளைச்சல்களைப் பெருக்க வேண்டும் என்றும் அதிகப்படியாகப் பயனடையும் போக்கினையும் அறிந்திருந்து பொருளாதாரத்தைப் பெருக்குவதில் உறுதுணையாக இருந்தனர் என்பது இதன்வழித் தெளிவாக அறியமுடிகிறது.

மேற்கண்ட இலக்கியச் சான்றுகளின் வழிப் பண்டையத் தமிழர்கள் எவ்வாறு திட்டமிட்டு உழவுத் தொழில் மேற்கொண்டனர் என்பதும் மேலும், பயிர்த்தொழிலை எவ்வாறு திட்டமிட்டுச் செயல்படுத்தினர் என்றும், உணவு உற்பத்தியினைப் பெருக்குவதில் தெளிவுடனும், மதிநுட்பத்துடனும், நிருவகிக்கும் ஆற்றலுடன் செயல்பட்டு, வாழ்ந்துள்ளனர் என்பதும் இதன்வழித் தெளிவாகப் புலப்படுகின்றது.

**நெசவுத் தொழில்**

பண்டைக்கால மக்கள் கைத்தொழில்கள் மூலம் தங்களது வாழ்வாதாரத்துக்குத் தேவையான வருமானத்தைப் பெருக்கிக் கொண்டனர். இதில் மிகவும் முக்கியமான இன்றியமையாத கைத்தொழிலாகக் கருதப்படுவது **'நெசவுத்தொழில்'** ஆகும். இது வாழ்வியல் தொழில் என்றும் அழைக்கப்படுகிறது.

"**இது வீட்டுத் தொழில்களில் முக்கியமானது. பண்டைத் தொழில்களுள் ஒன்று. விவசாயத்திற்கு அடுத்து மக்கள் நாகரிகம் அமையத் தொடங்கியதும் கையாண்ட முதல் கைத்தொழில்**" நெசவுத்தொழில் என்று பிரித்தானியா கலைக்களஞ்சியம் விளக்கம் அளிக்கிறது.

மக்கள் சமூகத்திற்கு உணவினை அடுத்து இன்றியமையாதது ஆடையாகும். விலங்குகளைப் போலன்றி உடலை மறைத்தற்குரிய உடையினை அணிந்து மானத்துடன் வாழும் பண்புமுறை மனித வாழ்க்கையின் சிறப்பியல்பாகும். பண்டைக்கால மக்கள் தங்கள் நுண்ணறிவின் திறத்தால் பருத்தியின் பஞ்சினை நூலாக நூற்று, ஆடையாக நெய்து அணியத் தொடங்கியது மட்டும் அல்லாமல் அதில் தங்களுடைய தேவைக்குப் போக மிகுதியான உற்பக்திப் பொருட்களை வணிகமும் செய்தனர். ஆகையால் அவர்களுடைய வருமானமும் வளர்ச்சி நிலையினை அடைந்தது. இன்றும், உலகச் சந்தையில் பருத்திக்கென்று தனியிடம் உண்டு. இவ்வாறானப் பருத்தி பண்டையக் காலம் முதற்கொண்டு உள்நாட்டிலேயே உற்பத்தியும் செய்யப்பட்டது. இதனைப் புறநானூறு.

**பருத்தி வேலிச் சீறூர் மன்னன்**

**(புறம்.299:1)** என்கிறது.

இப்பாடலடியில் குறிக்கப்பெறும் செய்தியாவது, பண்டையக்கால மக்கள் பருத்திப்பயிரினை மிகுதியாக விளையச்செய்ததும், அவை பார்பதற்கு வேலிப் போல, அவ்வூரைச் சுற்றி முழுவதும் அமைந்து காட்சியளிப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. இதன்படி, பருத்தியின் முக்கியத்துவம் உணர்ந்து மக்கள் அதனை அதிக அளவில் உற்பத்தி செய்ததினை இப்பாடல் முன்வைக்கிறது. மேலும்,

**பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து**

**(புறம்.326:5)**

என்பதில், பருத்திப்பெண்டிர் என்று குறிப்பது, முற்கால மக்களிடம் பருத்தியினைக் கொண்டு நூல் நூற்போருக்கு வழங்கியப் பெயராக எண்ணப்படுகிறது. இவ்விதமான நூல்நூற்கும் தொழிலினைப் பண்டைய மக்கள் கைத்தொழிலாகவும், குடிசைத்தொழிலாகவும் செய்தனர். இதன் மூலம் அவர்களின் வருவாயும் பெருகிற்று. மேலும்,

**வில்எறி பஞ்சியின் வெண்மழை தவழும்**

**(அகம்.133:6)**

என்ற பாடலின் வாயிலாக நமது பண்டைய மக்கள் பருத்திப் பஞ்சினை அதனுடைய கொட்டையிலிருந்து பிரித்தெடுக்க வில்லினைப் பயன்படுத்தினர் என்பது அறியப்படுகிறது. இதன்படி, பழந்தமிழர் தங்களுடைய தொழில் வளர்ச்சிக்காக மிகுந்த உழைப்பையும், அறிவார்ந்த திறமைகளையும் வளர்த்துக் கொண்டனர். மேலும், இப்பாடலில் பஞ்சியை அதன் கொட்டையில் இருந்து எடுக்க **'வில்'** எனும் கருவி பயன்பட்டச் செய்தி உரைக்கப்படுகின்றது. இவற்றை நோக்கும் போது பருத்தியின் அதிகப்படியான உற்பத்தியாள்தான் இவ்விதமான தொழில் உத்திமுறை பயன்பட்டுள்ளதை இப்பாடல் உறுதிச்செய்கின்றது.

மேற்கண்ட சான்றுகள் மூலம் பழந்தமிழர்கள் சிறந்த ஆடை உற்பத்தி திறன் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர் என்பது தெளிவாகிறது. அக்கால மக்களிடம் பருத்தி ஆடையினைத் தவிர வேறு பல ஆடைகளும் புழக்கத்தில் இருந்தன. அவை, தழை ஆடை, மெல்லிய தோல் ஆடை, மற்றும் பல. இவற்றில் பருத்திக்கு அதிக வளர்ச்சியும், வருமானமும் கிடைக்கப்பெற்றது இதன்வழி மெய்ப்பிக்கப்படுகின்றது.

**நிலஞ்சார்த் தொழில் (கால்நடை வளர்ப்பு)**

நிலம் சார்ந்த தொழில்கள் பண்டைய காலத்தில் நடைப்பெற்றன. ஐந்திணைக்கும் உரிய திணைச்சார் தொழில்கள் என்றும் இவை அழைக்கப்பட்டன. அவற்றில் குறிப்பாகக் கால்நடை வளர்ப்பு. முல்லை நிலத்தில் அஃதாவது நீர்வளமும், நிலவளமும் குறைந்த புன்செய் நிலப்பகுதியில், மக்கள் ஆடு, மாடு வளர்ப்பதைப் பெருந்தொழிலாகக் கொண்டிருந்தனர். அந்நாளில் பசுக்களையே பெருஞ்செல்வமாகக் கருதினர். இதனை,

**எல்லா இஃது ஒன்று கூறு – குறும்பு இவர்**

**புல்லினத்தார்க்கும்,குடம் சுட்டவர்க்கும் எம்**

**(கலி.107:1-2)**

என்ற கலித்தொகை பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

இப்பாடலடிகளின் மூலம் முல்லை நிலத்து மக்கள் கறவைப் பசுக்களை வைத்து இருந்தனர் என்றும், அவ்வாறு அவர்கள் வைத்து இருந்த பசுக்களில் எவை எல்லாம் குடப்பால் கறக்கும் தன்மைக் கொண்டவை என்பதனைக் கணித்துக் கூறும் திறனுடையவர்களாக ஆயர்குல மக்கள் விளங்கினர் என்பதும் தெரிகிறது. இதன்படி, பழந்தமிழர்கள் தங்களுடைய நுட்பமான அறிவினைக் கொண்டு தற்சார்ப்பு பொருளாதாரம் என்று அழைக்கக்கூடிய கால்நடை வளர்ப்பின் மூலமாக அவர்களுக்கான வருவாயும், நிதிவளமையும் பெருக்கிக் கொண்டனர். மேலும், இவ்விதமான வளர்ச்சி நிலைக்குக் காரணமாக அமைந்தவை அவர்களின் நிருவகிக்கும் ஆற்றலும், தீர்மானிக்கும் திறமையும்தான் என்பதனை உறுதிச் செய்யும் விதமாக இச்சான்று பயின்று வந்துள்ளது.

**வாணிகத் தொழில்கள்**

பண்டைய நாளில் வாணிகம் **'பண்டமாற்று'** முறையில் அமைந்திருந்தது. மக்கள் வாழ்க்கைக்குத் தேவையாகத் தம்மிடமுள்ள பொருள்களைக் கொடுத்து, மாற்றாகத் தங்களிடம் இல்லாதப் பொருட்களைப் பிறரிடமிருந்து பெறுதல் **'பண்டமாற்று'** என வழங்கப்பட்டது. நானிலங்களில் வாழ்ந்த மக்கள் தத்தம் நிலங்களில் கிடைத்த பொருள்களைப் பிற நிலப்பொருள்களுக்குப் பண்டமாற்றியதைப் பழந்தமிழ் இலக்கிய பாடல்களின் மூலம் அறியமுடிகிறது. அந்தவகையில், பின்வரும் இலக்கிய சான்றுகள் வாணிகத்திற்கும், அதன் மூலம் நிதி உருவாக்கத்திற்கும் எவ்வாறு வித்திட்டன என்பதனைக் காண்போம்.

**மீன் வேட்டம்**

நெய்தல் நிலத்து மக்கள் கடலில் மீன்பிடித்தலைத் தலையாயத் தொழிலாகக் கொண்டிருந்தனர். பரதவர் மக்கள் தூண்டிலில் சிறிய மீன்களை இரையாகக் குத்திக் கடலிலும், கழியிலும் எறிந்து மீன் பிடிப்பர். மேலும், ஆழ்கடலில் மீன்பிடிக்க திமில், அம்பி, தோணி போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். இதனை,

**வாள்வாய்ச் சுறவின் பனித்துறை நீந்தி**
**நாள்வேட்டு எழுந்த நயன்இல் பரதவர்**
**வைகுகடல் அம்பியின் தோன்றும்**

**(அகம்.187:21-23)**

என்ற பாடல் அடிகளில் சுட்டுகின்றன. மேலும்,

**ஓங்குதிரைப் பரப்பின் வாங்குவிசைக் கொளீஇ**
**…………………………………………………..**
**தழைஅணி அல்குல் செல்வத் தங்கையர்**
**விழவுஅயர் மறுகின் விலைஎனப் பகரும்**

**(அகம்.320:1-4)**

என்ற பாடல் வரிகளும் குறிப்பிடுகின்றது.

பரதவர் பிடித்துவரும் மீன்களைப் பரதவ மகளிர் ஊருக்குள் எடுத்துச் சென்று விற்றுவிட்டு அதற்கு ஈடாகத் தமக்குத் தேவையான பிற பொருட்களைப் பெற்று வந்தனர் என்பதனை இப்பாடல் அடிகள் உரைக்கின்றன. மேலும்,

**நாள்வலை முகந்த கோள்வல் பரதவர்**
**நுணங்குமணல் ஆங்கண் உணங்கப் பெய்ம்மார்**
**பறிகொள் கொள்ளையர்,……………………….**

**(அகம்.300:1-3)**

என்ற பாடலடிகளில், மீன் வேட்டையில் வல்ல பரதவர்கள் விடியற் காலையில் கடலிற் சென்று வலைகொண்டு மீன்களைப் பிடிப்பர். பின்னர், பறிகொண்டு அவற்றை வாரி எடுத்து நுண்ணிய மணற்பரப்பில் காயவைப்பர்; பின்னர் அதனை விற்று வருமானத்தை ஈட்டுவர்.

இவ்வாறு பண்டைய காலத்தில் மீன்பிடித் தொழில் பொருளாதாரத்திற்கு வித்திட்டதனை மேற்கண்ட இலக்கியச் சான்றுகள் விளக்கிச்செல்கின்றன.

**முத்துக்குளித்தல்**

நெய்தல் நிலப்பகுதி மக்கள் மீன்பிடித்தல் தொழிலுக்குப் பிறகு முத்துக்குளித்தல் தொழிலில் சிறந்து விளங்கினர். பெருங்கடலினின்று உருண்டு திகழும் முத்துக்களைத் திரட்டிக் கொண்டு வந்து பரதவர் பங்கீட்டுக் கொண்டு வணிகம் செய்ததைப் பின்வரும் இலக்கியச் சான்று எடுத்துரைக்கின்றது.

……………………………...**விரிதிரைக்**
**கண்திரள் முத்தம் கொண்டு ஞாங்கர்த்**
**தேன்இமிர் அகன்கரைப் பகுக்கும்**
**கானல்அம் பெருந்துறைப் பரதவன் எமக்கே**

**(அகம்.280:11-14)**

மேலும்,

**பல்மீன் கொள்பவர் முகந்த இப்பி**
**நார்அரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும்**

**(அகம்.296:8-9)**

என்ற பாடலடிகளில் கடற்கரையோரங்களில் வாழ்ந்த பரதவர்கள் கொற்கைக் கடலில் மீன்பிடித்த போது அதனுடன் முத்துச்சிப்பிகளும் கிடைத்தன என்பதனைக் குறிப்பிடும் விதமாக இப்பாடல் அமைகின்றது. மேலும்,

………………**கணைக்கோட்டு வாளைக்கு**
…………………………………………………
**கழங்கு உறழ் முத்தமோடு நன்கலம் பெறூஉம்**

**(அகம்.126:8-12)**

என்ற பாடல் வரிகளிலும் இச்செய்தி குறிப்பிடப்படுகின்றது.

வாளைமீனுக்கு விலையாகக் கழற்காய் போன்ற பெரிய முத்துக்களை நல்ல அணிகலன்களாய்ப் பெற்றதை இவ்விலக்கியச் சான்று நமக்கு எடுத்துரைக்கின்றது. இதன்வழி, பழந்தமிழர்களின் தொழில் வளமையும், நிதி உருவாக்கும் முறையினையும் நன்கு அறிய முடிகிறது.

**உப்பு விளைவித்தலும் விற்றலும்**

நெய்தல் நிலமக்கள் கடற்கரையிலும், கழிக்கரையிலும் உள்ள உவர்நிலத்தில் சிறுசிறு பாத்திகள் அமைத்து அவற்றில் கடல் நீரினையும், உப்பங்கழி நீரையும் பாய்ச்சி உப்பு விளைவிப்பர். அதனால்,

நெய்தல் நில மகளிர் உப்பு வாணிகத்தில் சிறப்புடன் ஈடுப்பட்டனர். உப்பு வணிகர் உமணர் எனப்பட்டனர். இதனைப் பின்வரும் சான்று,

**………………..உமணர் காதல் மடமகள்**

**……………………………………………**

**சேரி விலைமாறு கூறலின்……………**

**(அகம்.140:5-8)**

எனக் குறிப்பிடுகிறது. மேலும்,

**நெல்லும் உப்பும் நேரே ஊரீர்**
**கொள்ளீ ரோ எனச் சேரிதொறும் நுவலும்**

**(அகம்.390:8-9)**

என்று உரைக்கிறது. இப்பாடல்வரிகள் நெய்தல் நிலமக்கள் விளைவித்த உப்பினை, மருத நிலப்பகுதி மக்களிடம் இருக்கும் நெல்லிற்கு ஈடாகக் கொடுத்து மாற்றிக்கொள்ளும் பண்டமாற்று வாணிகத்தை இப்பகுதி சுட்டிக்காட்டுகிறது.

**முடிவுரை**

பழந்தமிழ் இலக்கியங்களின் வாயிலாக மூத்தகுடி மக்களின் தொழில் முறைகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதும் அவர்களின் நிருவாகத்திறனை நமக்கு வெளிப்படுத்தும் விதமாக எண்ணற்ற தொழில்களை அவர்கள் செய்தனர் என்பதையும் இலக்கியப் பாடல்கள் காட்டுகின்றன. மேலும், பழந்தமிழர்களின் உழவுத் தொழில், நெசவுத் தொழில், நிலஞ்சார் தொழில்களான (கால்நடை வளர்ப்பு) போன்றவை அவர்களின் வாழ்வியல் தொழில்களாக விளங்கின. இத்தொழில்களில் அவர்கள் தங்களுக்கென்ற தனி உத்திமுறைகளையும், நிருவகிக்கும் திறனும் உடையவர்களாக விளங்கியதைப் பல பாடல்கள் சான்று பகருகின்றன. மேலும் இத்தொழில்களில் வீட்டுப் பெண்கள் ஈடுபட்டு தங்களுடைய தனித் திறமைகளை வெளிப்படுத்தி வருவாய் ஈட்டியச் செய்திகளைப் பழந்தமிழ் இலக்கியங்களில் காணமுடிகின்றது.

**துணை நூற்பட்டியல்**


1. **அரிமதி இளம்பரிதி - சங்க இலக்கியத்தில் மேலாண்மை - இலக்குமி நிலையம், முதல் பதிப்பு,** 2006.
2. **ஆ.கு., வணிகப்பொருளியல்- ராஜா பப்ளிகேசுஷன்ஸ், மறுப்பதிப்பு,** 2010
3. **ஆ.கு., சமூகவியல் கொள்கைகள், அண்ணா பல்கலைக்கழகம், பாரிநிலையம், முதல் பதிப்பு,** 2000.
4. **சிவலிங்கனார்,ஆ . தொல்காப்பியம் - உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், முதல் பதிப்பு,** 2021.
5. **பரிமேலழகர் - திருக்குறள் - திருமகள் நிலையம், நான்காம் பதிப்பு,** 2014 **ஜுலை.**
6. **பாலசுப்ரமணியன்,கு.வெ. - குறுந்தொகை (மூலமும் உரையும்) - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், முதல் பதிப்பு,**2004, **ஏப்ரல்.**
7. **பாலசுப்ரமணியன்,கு.வெ. - அகநானூறு (மூலமும் உரையும்) - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், முதல் பதிப்பு,**2004, **ஏப்ரல்.**
8. **பாலசுப்ரமணியன்,கு.வெ. - புறநானூறு (மூலமும் உரையும்) - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், முதல் பதிப்பு,**2004, **ஏப்ரல்.**
9. **பாலசுப்ரமணியன்,கு.வெ. - கலித்தொகை (மூலமும் உரையும்) - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், முதல் பதிப்பு,**2004, **ஏப்ரல்.**


நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை/NIL

கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை/NIL

கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன் I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

**உரிமம்**

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.

KALANJIYAM